செ.வெ.எண்: 25 / பிப்ரவரி நாள்: 15.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி இராமநாதபுரம், இலட்சுமிபுரம் ஊரணியில்**

**மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் மரக்கன்றுகளை நட்டார்.**

இராமநாதபுரம் மாவட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி இலட்சுமிபுரம் ஊரணியில் இன்று (15.02.2016) மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர்நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மரக்கன்றுகளை நட்டார்.

மரக்கன்று நடும் விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் மாநிலத்தில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் மாபெரும் மரம் நடவுத்திட்டம் 2011 முதல் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து மாநிலம் முழுவதும் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது. அதனையொட்டி இராமநாதபுரம் மாவட்டத்திலும் தொடர்ந்து மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 2011 -12 மற்றும் 2012-2013 -ஆம் ஆண்டுகளில் 475 இடங்களில் 1 இலட்சத்து 50 ஆயிரம் மரக்கன்றுகளும், 2013-2014-ஆம் ஆண்டில் 232 இடங்களில் 1 இலட்சத்து 70 ஆயிரத்து 250 மரக்கன்றுகளும், 2014-2015-ஆம் ஆண்டில் 164 இடங்களில் 1 இலட்சத்து 66 ஆயிரத்து 250 மரக்கன்றுகளும், 2015-2016-ஆம் ஆண்டில் 183 இடங்களில் 2 இலட்சத்து 9 ஆயிரத்து 375 மரக்கன்றுகளும் என மொத்தம் 6 இலட்சத்து 95 ஆயிரத்து 875 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

இராமேஸ்வரம் - தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலை, அனைத்துப் பள்ளிகள், கல்லூரிகள், ஊரணிகள் மற்றும் மக்கள் பயன்பாடுள்ள அதிக இடங்களில் மரக்கன்றுகள் நட்டிட மாவட்ட நிர்வாகமும், வனத்துறையும் இணைந்து செயல்படவுள்ளது. ஏற்கனவே தமிழக அரசு மூலம் பசுமையாக்குதல் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி இத்திட்டத்திற்கான முன்னேற்பாடு பணிகள் செயலாக்கப்பட்டு கிராமங்கள், நகரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றது. மரங்கள் செழிப்பாக வளர்ந்து நின்றால் தான் மழை நன்றாக பெய்யும். இந்தியாவில் தமிழகம் தான் மரம் வளர்ப்பதில் முன்னோடி மாவட்டமாக திகழ்கிறது. நாமும் இந்நாளில் நமது இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகளவு மரங்களை வளர்த்து, இங்கு வருகை தரும் வடநாட்டு இந்தியர்கள் வியப்படையும் வண்ணம் அதிக மரங்களை நட்டிட உறுதி ஏற்பது மட்டுமில்லாமல் செயல்படுத்திட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் முதுகுளத்தூர் கூட்டுறவு நிலவள வங்கித்தலைவர் திரு.இரா.தர்மர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.ஜெயஜோதி, இராமநாதபுரம் செய்யதம்மாள் அறக்கட்டளை நிர்வாக இயக்குநர் டாக்டர்.பாபு அப்துல்லா, வனப் பாதுகாப்பு அலுவலர் திரு.டெபாசிஸ்ஜனா,இ.வ.ப., மாவட்ட வனஅலுவலர் திரு.எம்.பிச்சை உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**